**பள்ளேபொல பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பள்ளேபொல பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பள்ளேபொல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குரிய பெக்கோ இயந்திரமொன்று விபத்துக்கு உட்பட்டதால் இடம்பெற்றிருந்த நட்டத்தை 02 உத்தியோகத்தர்களிடமிருந்து மேலும் அறவிடப்படவேண்டிய ரூபா 575,035 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவிற்காக பட்டியல் சமர்ப்பிக்கப்படாத 66 அபிவிருத்தி செயற்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 44,400,000 தொகை நிர்மாணக் கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் செயற்படுத்துவதற்கு முடியாததன் பேரில் 2022 ஆம் ஆண்டில் முதல் மாதத்தினுள் வேலையைப் பூர்த்தி செய்யும் எதிர்பார்ப்பில் கடன்கொடுத்தோராகக்கப்ப ட்டுள்ளதாக | |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கிராமிய வீதி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தி செயற்படுத்து வதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த எனினும் மீளாய்வாண்டில் செயற்படுத்தப்படாத 33 செயற்திட்டங்களில் மொத்தம் ரூபா 35,000,000 ஆன தொகை பெறுமதி அந்த அமைச்சில் இருந்து பெற வேண்டிய தொகையாக கருதி நிர்மாணக் கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் நிறைவேற்ற முடியாத செயற்திட்டங்களுக்குரிய கடன் கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்ட நிதி 2022 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு மூலம் நீக்கப்பட்டதாக | நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2017 முதல் 2020 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் செயற்படுத்தப்பட்டிருந்த கொடுப்பனவு பூர்த்தி செய்யப்பட்டிருந்த 03 அபிவிருத்தித் திட்டங்களுக்குரிய மொத்தம் ரூபா789,675 நிர்மாணக் கடன் கொர்டுத்தரேரின் கீழ் மேலும் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததது. | 2022 ஆம் ஆண்டில் நாட்குகுறிப்பு பதவி மூலம் சீராக்கம் செய்யப்படுவதாக | |

## 1.6.2 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 39,692,843 ஆன கூட்டுத் தொகையான 05 கணக்கு விடயங்கள் திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | ஆவணங்களை நாளது வரையாக்கி தகவல்களைத் தேடி 2022 ஆம் ஆண்டில் சீராக்குவதற்குத் தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 17,034,779 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,434,637 ஆகும்.

**2.2 வருமான நிர்வாகம்**

**வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஒரு அலகிலிருந்து நிலுவை வீதவரி மீதி ரூபா1,500 ஐ மிகைத்த 76 வீதவரி அலகுகளில் இருந்து 02 ஆண்டுகள் முதல் 18 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அறவிடப்படாமல் காணப்படும் நிலுவை வீதவரி ரூபா 270,224 தொகை மீளாய்வாண்டு திசெம்பர் 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை வீதவரி அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) **ஏனைய வருமானம்** | | |
| மத்திய மாகாண பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 அல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 879,638 மற்றும் குத்தகைக் கட்டணங்கள் ரூபா13,938,485 ஆக இருந்தது. | நிலுவைத் தொகையை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணங்களும் அறவிடப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மொத்தம் ரூபா 93,969 ஆன ஒட்டோலெவல் இயந்திரமொன்று, 1000 லீற்றர் நீர்த்தாங்கி ஒன்றும் அதற்குரிய உதிரிப் பாகங்களும் 114 நூலகப் புத்தகங்களும் பற்றாக்குறையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | பற்றாக்குறை தொடர்பாக நி.பி 104 பரிசோதனை ஒன்றை மேற்கொள்வதற்கு உள்ளுராட்சிமன்ற ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | பற்றாக்குறை தொடர்பாக முறையான பரிசோதனை ஒன்று மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய 03 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,507,161 தொகை அறவிடப்பட முடியாதிருந்ததுடன் அதற்குரிய அறவிடாமல் காணப்படும் காலம் 1 ஆண்டிற்குக் குறைந்த மீதி ரூபா 1,980,083 உம் 1 ஆண்டுக்கு மேற்பட்ட 5 ஆண்டுகளுக்குக் குறைந்த மீதி ரூபா 510,000 உம் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 17,077 உம் உள்ளடக்கப்பட்டிருந்தது. | நிலுவைத் தொகையை எதிர்காலத்தில் விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பெற வேண்டிய தொகை அறவிடப்பட வேண்டும். |

## 3.3 விளைவற்ற குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குரிய ரூபா 3,961,218 கூட்டுத்தொகையான 02 கொங்கிறீட் கலவை இயந்திரங்கள் மற்றும் 03 வாகனங்களும் 02 முதல் 09 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன. | விளைவற்ற சொத்துக்களை கேள்வி கோரி விற்பதற்கும் ஏலத்தில் விற்பனை செய்வதற்கும் திருத்தி பயன்பாட்டிற்கு எடுக்கக் கூடிய சொத்துக்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக | திருத்த செய்யக்கூடிய சொத்துக்களை திருத்தம் செய்வதற்கும் ஏனைய சொத்துக்களை கைதவிப்பு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்தப்படும் அளவிடப்பட்டுள்ள 15 ஏக்கர் 33 ரோட் 0.15 பேர்ச் அளவிலான மயான பூமி மற்றும் ஏனைய 25 காணிப் பகுதிகள் மற்றும் அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத 15 மயான பூமிகளின் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை. | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு மற்றும் பிரதேச செயலகம் தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு கையேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | குறித்த காணிப் பகுதியின் அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.5 மனித வள முகாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்கள் மற்றும் நான்கு ஊழியர்களின் ரூபா 426,262 கூட்டுத் தொகையான இடர் மற்றும் விழா முற்பண கடன் அறவிடப்பட்டிருக்க வில்லை. | விரைவில் கடன் மீதிகள் தீர்வு செய்வதாக | நிலுவைக் கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும். |